FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

2022 ஆகஸ்ட்

Vol. 02 - தொகுதி 08


ஆற்றுகை கலைஞர் ஷாலிக ருக்ஷான் கைது.


சமூக ஊடக செயற்பாட்டாளரான இளம்பெண் நாடுகடத்தப்பட்டமை.


வசந்த முதலிகே உட்பட மூன்று பேருக்கு தடுப்புக்காவல் உத்தரவு.

ஊடக சுதந்திரம் குறித்து ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் பின்தொடர்வுகள் தொடர்பாக சுருக்கமான முறையில் கண்காணித்து இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான சம்பவங்கள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அது தொடர்பான முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 36 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஆகஸ்ட் 2022 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 05 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 28 சம்பவங்கள், தொழில்சார் நிபுணத்துவம் தொடர்பான ஒரு சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகளின் கீழ் 02 சம்பவங்கள் இங்கு அவதானிக்கப்பட்டுள்ளன. கருத்துச் சுதந்திரத்தின் வெளிப்பாடான போராட்டங்களில் பங்கேற்றதற்காகப் பல்வேறு குற்றச் சாட்டுகளில் பேரில் ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டதை ஆகஸ்ட் மாதத்தில் கண்டுகொள்ள முடியுமாகக் காணப்படுகின்றது, மேலும் இந்த அறிக்கையில் தெளிவான தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடிய இயலுமான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சம்பவங்கள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.

## ஆகஸ்ட் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. கவிஞர் மற்றும் ஆசிரியருமான அஹ்னாப் ஜசீமின் பெயர், பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் பட்டியலிடப்பட்டமை.
2. போராட்டத்தில் (GGG) ஈடுபட்ட சமூக ஊடக ஆர்வலர் விமுக்தி ரணசிங்க கைது செய்யப்பட்டமை.
3. காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்துகொண்ட ஆர்வலரான சித்தும் வசந்த ஜயக்கொடி கைது செய்யப்பட்டமை.
4. முன்னணி தொழிற்சங்க தலைவரும் மனித உரிமை ஆர்வலருமான ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமை.
5. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவுக்கு எதிராகக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் நீதிமன்றில் அறிக்கையொன்றை முன்வைத்தமை.
6. ஜனாதிபதியால் விதிக்கப்பட்ட அவசரகாலச் சட்டங்களுக்கு எதிராக லிபரல் இளைஞர் இயக்கம் அடிப்படை உரிமை மனுவொன்றை முன்வைத்தமை.

7. தேசிய பிக்கு முன்னணியின் ஊடகச் செயலாளர் கொஸ்வத்தே மகாநாம தேரர் கைது செய்யப்பட்டமை.

8. காலிமுகத்திடல் போராட்டக்களப் பகுதியில் தங்கியுள்ள அனைவரையும் வெளியேறுமாறு கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்தல் விடுத்தமை.

9. காலிமுகத்திடல் போராட்டத்திற்கு ஆதரவாகச் சமூக வலைதளங்களில் தீவிரமாகத் தமது கருத்துக்களை தெரிவித்த பிரித்தானிய இளம் பெண்ணின் விசா இரத்து செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டமை.

10. சிரச ஊடகவியலாளர்கள்மீதான தாக்குதல்கள் தொடர்பான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் வெளியிடப்பட்டமை.

11. ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காக தொழிற்சங்க தலைவர்கள் இருவர் கைது செய்யப்பட்டமை.

12. ஜனாதிபதி மாளிகை அருகே நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பேமச்சந்திர உள்ளிட்டோரை நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்தியமை.

13. சட்டத்திற்கு முரணான வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு எதிராக அடிப்படை உரிமை மனு தாக்கல்செய்யப்பட்டமை.

14. போராட்டம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் மாணவர் செயற்பாட்டாளரான மங்கள மத்துமகே கைது செய்யப்பட்டமை.

15. காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர்களான இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டமை.

16. போராட்டம் தொடர்பாகக் கைது செய்யப்படுவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவுக்குச் சட்டமா அதிபர் எதிர்ப்பு தெரிவித்தமை.

17. அமைதியான போராட்டங்களை ஒடுக்குவதற்கு அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்துவதை ஐ.நா மனித உரிமை நிபுணர்கள் கண்டித்துள்ளமை.

18. போராட்டத்துடன் தொடர்புடைய சமூக ஆர்வலர்கள் எட்டு பேர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபட்டமை.

19. அச்சுறுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கியமை.

20. போராட்டத்தில் ஈடுபட்ட 19 மாணவர்கள் கைது செய்யப்பட்டமை மற்றும் மூன்று மாண தலைவர்களுக்கு எதிராகத் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டமை.

21. பாரிஸ் போராட்டங்களில் செயல்பாட்டாளராக இருந்த அர்ஜுன அமதொரு இலங்கையில் கைது செய்யப்பட்டமை.

22. காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர் சஹஜ மதுசங்க காலியில் கைது செய்யப்பட்டமை.

23. சமூக ஆர்வலர், சிந்தக ராஜபக்ச கைது செய்யப்பட்டமை.

24. காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளராக இருந்த பியத் நிகேஷல கைது செய்யப்பட்டமை.

25. சோசலிச மாணவர் சங்கத் தலைவர் ரங்கன லக்மால் தேவப்பிரிய கைது செய்யப்பட்டமை.

26. சோசலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகரவை செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோது பொலிசார் கைது செய்ய முற்பட்டமை.

27. "இடர் சூழ்நிலையில் அறிக்கையிடல், ஊடகவியலாளரின் பொறுப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் வரம்புகள்" என்ற தலைப்பில் சுதந்திர ஊடக இயக்கம் திறந்த உரையாடலொன்றை ஏற்பாடு செய்தமை.

28. போராட்டத்துடன் தொடர்புடைய மற்றும் ஆற்றுகை கலைஞரான ஷாலிக ருக்ஷான் சேனாதீர கைது செய்யப்பட்டமை.

29. போராட்டத்தின் செயல்பாட்டாளர் சேனாதி குருகே கைது செய்யப்பட்டமை.

30. ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டமைக்காகச் செயற்பாட்டாளர்கள் பலரை நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தியமை.

31. காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆர்வலரான கன்னியாஸ்திரி மேரி சோனாலியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியமை.

32. ஆர்ப்பாட்டத்தின்போது செயற்பாட்டாளர்கள் 27 பேர் கைது செய்யப்பட்டமை.

33. அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின்போது ஆர்வலராகச் செயற்பட்ட சட்டத்தரணி இந்திக்க அத்தநாயக்கவை குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைத்தமை.

34. கலைத்துறையில் செயற்பாட்டாளரும் தொழில்முறை வடிவமைப்பாளருமான சஞ்சய ஏபா சௌனவிரத்னவை நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தியமை.

35. போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதை கண்டித்து ஹியுமன் ரயிட்ஸ் வொச் அமைப்பு தமது எதிர்ப்பைத் தெரிவித்தமை.

36. நீதிமன்றத்தில் ஆஜரான போராட்ட ஆர்வலர்கள் இருவருக்கு பிணை வழங்கப்பட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 ஆகஸ்ட் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 28 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 02 |
| **மொத்தம்** | **36** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் காணப்படுதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 05 சம்பவங்கள் ஆகஸ்ட் மாதத்தில் அவதானிக்கப்பட்டன.**

**அட்டவணை 2: 2022 ஆகஸ்ட் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 05**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 04 |
| சுதந்திரம் பறிக்கப்படுதல் | 01 |
| **மொத்தம்** | **05** |

1) **கவிஞர் மற்றும் ஆசிரியருமான அஹ்னாப் ஜசீமின் பெயர், பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் பட்டியலிடப்பட்டமை.**
கவிதைப் புத்தகம் எழுதி வெளியிட்டதற்காகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 579 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் ஜசீம், நீதிமன்றத்தால் ஆகஸ்ட் மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் கடந்த 1ம் திகதி இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானியில் “பயங்கரவாத நடவடிக்கைகளுக்காகப் பெயரிடப்பட்டவர்கள்“ என்ற பட்டியலில் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது.
ஆதாரம்: 1. twitter.com 2. www.youtube.com

2) **அச்சுறுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்கியமை.**
2021 ஜூன் மாதம் முகநூல் உரையாடலில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் விடுத்த மரண அச்சுறுத்தல் தொடர்பான விசாரணைகுறித்து வாக்குமூலத்தை வழங்க ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன ஆகஸ்ட் 9 ஆம் திகதி கொழும்பு குற்றவியல் விசாரணைத் திணைக்களத் தலைமையகத்தில் ஆஜராகியிருந்தார்.
ஆதாரம்: twitter.com

3) **காலிமுகத்திடல் போராட்டத்திற்கு ஆதரவாகச் சமூக வலைதளங்களில் தீவிரமாகத் தமது கருத்துக்களை தெரிவித்த பிரித்தானிய இளம் பெண்ணின் விசா இரத்து செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டமை.**
விசா நிபந்தனைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில், ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த கெய்லி ஃப்ரேசர் (Kayleigh Fraser) என்ற இளம் பெண்ணின் கடவுச்சீட்டை ஆகஸ்ட் 3 ஆம் திகதி குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது, அதைத் தொடர்ந்து, அவரது விசா இரத்து செய்யப்பட்டு, 15 ஆம் திகதிக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவை இரத்து செய்யக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்தபோதிலும் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே நிராகரிக்கப்பட்டது.
ஆதாரம்: www.bbc.com

4) **சோசலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எரங்க குணசேகரவை செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோது பொலிசார் கைது செய்ய முற்பட்டமை.**
போராட்டக்காரர்கள்மீதான அடக்குமுறைக்கு எதிராக ஆகஸ்ட் 23 திகதி அன்று மருதானை CSR மண்டபத்தில் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் செய்தியாளர் மாநாட்டை நடத்திக் கொண்டிருந்தபோது, சில பொலிஸ் குழுக்கள் வந்து அந்த இடத்தைச் சோதனையிட்டன. நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் பேரில் எரங்க குணசேகரவை கைது செய்யத் தேடுவதாக அவர்கள் தெரிவித்தனர். பின்னர், குறித்த பொலிஸ் குழுக்கள் வெளியேறியதுடன், சட்டத்தரணி சுனில் வதகல, இது தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு பொய்யானது எனத் தெரிவித்துள்ளார்.
ஆதாரம்: www.facebook.com

5) **அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களின்போது ஆர்வலராகச் செயற்பட்ட சட்டத்தரணி இந்திக்க அத்தநாயக்கவை குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைத்தமை**
மொனராகலை பிரதேசத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலரான சட்டத்தரணி அத்தநாயக்க, ஆகஸ்ட் 31ஆம் திகதி கொழும்பு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்ததுடன் அங்கு அரச எதிர்ப்பு போராட்ட அமைப்பு மற்றும் அவருக்குக் காணப்பட்ட தொடர்புகள் சம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.
ஆதாரம்: www.youtube.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஆகஸ்ட் மாதத்தில் ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 28 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் இராஜினாமா செய்ய நிர்ப்பந்தித்து போராட்டங்களில் ஈடுபட்ட செயற்பாட்டாளர்களை கைது செய்யப்பட்ட சம்பவங்கள் ஆகும். நீதிமன்ற உத்தரவை மீறி, பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில், போராட்டக்காரர்கள்மீது பொலிஸார் தொடர்ந்து கடும் நடவடிக்கை எடுத்து வருவது அவதானிக்கப்படும் சம்பவங்களிலிருந்து தெளிவாகின்றது.**

**அட்டவணை 03 – 2022 ஆகஸ்ட் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் – 28 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 24 |
| புதிய சட்டங்களை விதித்தல் | 01 |
| பத்திரிகை சுதந்திரத்திற்கான அரசியலமைப்பு பாதுகாப்பு | 03 |
| **மொத்தம்** | **28** |

1) **போராட்டத்தில் (GGG) ஈடுபட்ட சமூக ஊடக ஆர்வலர் விமுக்தி ரணசிங்க கைது செய்யப்பட்டமை.**

ஆகஸ்ட் 2ஆம் திகதி தெமட்டகொட குற்றப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு அவரது சமூக வலைத்தள நடவடிக்கைகள்குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்ட நிலையில், 3ஆம் திகதி காலைக் குற்றவியல் விசாரணை திணைக்களத்தினால் மஹரகமவில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார். ஆகஸ்ட் 5 ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேரா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஆகஸ்ட் 12ஆம் திகதி அவருக்குப் பிணை வழங்கப்பட்டு, குறித்த வழக்கு நவம்பர் 24ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: twitter.com

2) **காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்துகொண்ட ஆர்வலரான சித்தும் வசந்த ஐயக்கொடி கைது செய்யப்பட்டமை.**

குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் ஆகஸ்ட் 2 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர், கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் ஆகஸ்ட் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆதாரம்: www.facebook.com

3) **முன்னணி தொழிற்சங்க தலைவரும் மனித உரிமை ஆர்வலருமான ஜோசப் ஸ்டாலின் கைது செய்யப்பட்டமை.**

மே 28ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியில் கலந்துகொண்டு நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டின் பேரில் ஆகஸ்ட் 3ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர், கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் ஆகஸ்ட் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஆகஸ்ட் 8 ஆம் திகதி ஒரு பிரேரணையில் வழக்கு திரும்பப் பெறப்பட்டபோது, ரூபா 5 இலட்சம் மதிப்பிலான இரு சரீர பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆதாரம்: lankadeepa.lk

4) **ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவுக்கு எதிராகக் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் நீதிமன்றில் அறிக்கையொன்றை முன்வைத்தமை.**

யூடியூப்பில் அரசாங்கத்தை விமர்சித்ததற்காக, ஆகஸ்ட் 3 ஆம் திகதி அவருக்கு எதிராக 22659/22 என்ற வழக்கு இலக்கத்தின் கீழ் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் கருத்துப் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணையின் சுருக்கம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதேவேளை, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைத்து விசாரணை மேற்கொண்டமை தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர அடிப்படை உரிமைகள் வழக்கொன்றை தாக்கல் செய்தார் (SC/FR/226/2022). தரிந்துக்கு எதிராகக் குறித்த வழக்கு அவரை பழிவாங்கும் நோக்கம் கொண்டது என Digital Journalists Collective வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: www.facebook.com

5) **ஜனாதிபதியால் விதிக்கப்பட்ட அவசரகாலச் சட்டங்களுக்கு எதிராக லிபரல் இளைஞர் இயக்கம் அடிப்படை உரிமை மனுவொன்றை முன்வைத்தமை.**

குறித்த அமைப்பின் சார்பில் சட்டத்தரணிகளான நாமினி பண்டித மற்றும் ருசிரு எகொட ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், இந்த அவசரகாலச் சட்டங்கள்மூலம் அமைதியான மற்றும் வன்முறையற்ற பொதுக் கூட்டங்களைத் தடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு காணப்படுவதனால் அரசியலமைப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள பேச்சு சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் ஆகிய உரிமைகள் பறிக்கப்படுகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவைப் பரிசீலித்த உச்ச நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, ஆகஸ்ட் 12-ம் திகதி குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடிவு செய்தது. மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கலாநிதி கெஹான் குணதிலக்க ஆஜராகியிருந்தார்.

ஆதாரம்: https://www.facebook.com

6) **தேசிய பிக்கு முன்னணியின் ஊடகச் செயலாளர் கொஸ்வத்தே மகாநாம தேரர் கைது செய்யப்பட்டமை.**

நீதிமன்ற உத்தரவை மீறி ஜூன் 9 ஆம் திகதி பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கிருலப்பனை பொலிசாரால் ஆகஸ்ட் 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, 4 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். கடந்த 5ம் திகதி மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது ரூபா ஐந்து இலட்சம் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: www.dinamina.lk

7) **காலிமுகத்திடல் போராட்டக்களப் பகுதியில் தங்கியுள்ள அனைவரையும் வெளியேறுமாறு கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்தல் விடுத்தமை.**

ஆகஸ்ட் 3ம் திகதி ஒலிபெருக்கி மூலம் அப்பகுதியில் தங்கியுள்ள அனைவரும் ஆகஸ்ட் 5ம் திகதிக்குள் வெளியேற வேண்டும் என்றும், நடந்து முடிந்த கட்டுமான மற்றும் சாகுபடி பணிகள் அனைத்தையும் அகற்ற வேண்டும் என்றும் காவல்துறையினர் அறிவித்ததனை தொடர்ந்து அதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரீட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. ஆகஸ்ட் 5 ஆம் திகதி குறித்த மனு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை அங்கு காணப்படும் போராட்டக்காரர்களோ கட்டுமானங்களோ அகற்றப்பட மாட்டாது என்று சட்டமா அதிபர் குறிப்பிட்டார்.

ஆதாரம்: www.facebook.com

8) **சிரச ஊடகவியலாளர்கள்மீதான தாக்குதல்கள் தொடர்பான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் வெளியிடப்பட்டமை.**

ஜூலை 9ஆம் திகதி ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகில் சிரச ஊடகவியலாளர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல், ஊடகவியளாளர்களை இலக்குவைத்து திட்டமிட்ட தாக்குதல் எனவும், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே இதற்கு நேரடிப் பொறுப்பு கூறவேண்டியவர் எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த அதிகாரியைக் கொழும்பிற்கு வெளியே உள்ள பகுதிக்கு இடமாற்றம் செய்ய வேண்டும் எனவும், அடையாளம் இனங்காண முடியாத சீருடைகள் சிவில் கடமைகளுக்குப் பொருத்தமற்றவை எனவும், அதற்கான பொருத்தமான சீருடை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆணைக்குழு பொலிஸ் மா அதிபருக்குப் பரிந்துரை செய்துள்ளது.

ஆதாரம்: www.themorning.lk

9) **ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதற்காக தொழிற்சங்க தலைவர்கள் இருவர் கைது செய்யப்பட்டமை.**

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளர் தனஞ்சய சிறிவர்தன மற்றும் முன்னாள் தலைவர் பாலித எடம்பாவல ஆகியோர் கொழும்பு மத்திய பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆகஸ்ட் 4ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஜூலை 9ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தின்போது ஜனாதிபதி மாளிகைக்குள் அத்துமீறி நுழைந்தமையே அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும்.

ஆதாரம்: www.newswire.lk

10) **ஜனாதிபதி மாளிகை அருகே நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்றதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பேமச்சந்திர உள்ளிட்டோரை நீதிமன்றத்திற்கு ஆஜர்படுத்தியமை.**

இந்த வழக்கு ஆகஸ்ட் 5ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஜூலை 6ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் தவறானவை எனவும், அதனடிப்படையில் தனது தரப்புதாரரின் பெயரைக் இந்த வழக்கின் சந்தேகநபராகக் குறிப்பிட முடியாது எனச் சட்டத்தரணிகள் முன்வைத்த ஆரம்ப ஆட்சேபனையை நீதவான் ஏற்றுக்கொண்டதனை தொடர்ந்து. ஹிருணிகா உட்பட்ட சந்தேக நபர்களின் பெயரை அவர் குறிப்பிட மறுத்துவிட்டார். ஹிருணிகா பேமசந்திர உள்ளிட்ட 9 பேர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: medialk.com

11) **சட்டத்திற்கு முரணான வகையில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு எதிராக அடிப்படை உரிமை மனு தாக்கல்செய்யப்பட்டமை.**

ஜூலை 8 ஆம் திகதி பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகக் கோரி இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் சார்பில் ஊடகவியலாளர்களான தரிந்து ஜயவர்தன மற்றும் தரிந்து உடுவரகெதர ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஆதாரம்: theleader.lk

12) **போராட்டம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் மாணவர் செயற்பாட்டாளரான மங்கள மத்துமகே கைது செய்யப்பட்டமை.**

கடந்த ஆகஸ்ட் 8ஆம் திகதி கொழும்பு பொது நூலகத்திற்கு அருகாமையில் முச்சக்கர வண்டியில் சிவில் உடையில் வருகை தந்த குழுவினரால் அவர் கடத்திச் செல்லப்பட்டதாக முதலில் தெரிவிக்கப்பட்டது, பின்னர் நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட அவர், ஆகஸ்ட் 12ஆம் திகதி வரையிலும், இரண்டாவது தடவையாக ஆகஸ்ட் 24ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, ஆகஸ்ட் 25ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: 1. ceylontoday.lk, 2. www.youtube.com

13) **காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர்களான இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டமை.**

மாற்றத்திற்கான இளைஞர்கள்" அமைப்பின் உறுப்பினரான பானு பிரபாஷன மற்றும் கோட்டாகோகம நூலகத்தின் செயற்பாட்டாளர் சசிந்து தாரக ஆகியோர் ஆகஸ்ட் 8 ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டதுடன் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து கொண்ட பின்னர் கைது செய்யப்பட்டனர். மறுநாள் அவர்கள் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

ஆதாரம்: twitter.com

14) **போராட்டம் தொடர்பாகக் கைது செய்யப்படுவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவுக்குச் சட்டமா அதிபர் எதிர்ப்பு தெரிவித்தமை.**

காலிமுகத்திடல் போராட்டத்தின் முன்னணி செயற்பாட்டாளராக இருந்த அருட் தந்தை ஜீவந்த பீரிஸ் சமர்ப்பித்த இந்த அடிப்படை உரிமை மனு கடந்த ஆகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது. சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரசாங்கசட்டத்தரணி, ஆர்ப்பாட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட பல குற்றங்கள் தொடர்பில் அருட் தந்தை ஜீவந்தவுக்கு எதிராகப் பொலிஸார் நீதிமன்றில் அறிக்கையிட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால் தனது கட்சிக்காரருக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்படவில்லையென அருட் தந்தை ஜீவந்த சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். இந்த மனுவைச் செப்டம்பர் 1 ஆம் திகதி மீள விசாரணைக்குத் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, ஆகஸ்ட் 12ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் சட்டத்தரணிகள் ஊடாக ஆஜராகிய அருட் தந்தை ஜீவந்த பீரிஸை பிணையில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

ஆதாரம்: www.runews.lk

15) **போராட்டத்துடன் தொடர்புடைய சமூக ஆர்வலர்கள் எட்டு பேர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபட்டமை.**

கடந்த மே மாதம் 25ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்ற நுழைவாயிலுக்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், அருட் தந்தை சத்தியவேல், தமிதா அபேரத்ன, இரத்திந்து சேனாரத்ன, ஜகத் மனுவரன, ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 8 பேர் ஆகஸ்ட் 9 ஆம் திகதி கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜராகியிருந்ததுடன் அவர்கள் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: dailymirror.lk

16) **போராட்டத்தில் ஈடுபட்ட 19 மாணவர்கள் கைது செய்யப்பட்டமை மற்றும் மூன்று மாணவ தலைவர்களுக்கு எதிராகத் தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டமை.**

ஆகஸ்ட் 18 ஆம் திகதி அன்று, அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் போராட்டத்தின்போது, "சட்டவிரோதக் கூட்டத்தில்" இணைந்த குற்றச்சாட்டின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டு, மறுநாள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்களில் 16 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகே, ஹஷந்த குணதிலக்க மற்றும் வணக்கத்திற்குரிய கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை 90 நாட்களுக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். குறித்த தடுப்புக்காவல் உத்தரவுகளில் கையெழுத்திட வேண்டாமென ஐ.நா. மனித உரிமைகளுக்கான விசேட பிரதிநிதி மேரி லோலர் ஜனாதிபதியிடம் கோரியமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: www.bbc.com

17) **பாரிஸ் போராட்டங்களில் செயல்பாட்டாளராக இருந்த அர்ஜுன அமதொரு இலங்கையில் கைது செய்யப்பட்டமை.**

பிரான்ஸை வசிப்பிடமாகக் கொண்ட இவர், GotaGoHome போராட்ட இயக்கத்துடன் இணைந்து பாரிஸில் நடைபெற்ற போராட்டங்களில் செயற்பாட்டாளராகச் செயற்பட்டதுடன் ஆகஸ்ட் 20 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது நிட்டம்புவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, அவர் செப்டம்பர் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவர் ஜூன் 9 ஆம் திகதி இலங்கையில் இருந்ததாகவும், அன்று நடந்த வன்முறை தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

ஆதாரம்: dailymirror.lk

18) **சமூக ஆர்வலர், சிந்தக ராஜபக்ச கைது செய்யப்பட்டமை.**

MONLAR அமைப்பின் அழைப்பாளரான இவர், போராட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிக் கொண்டிருந்தபோது கடந்த 18ஆம் திகதி கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டதுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் ஆகஸ்ட் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஜூலை மாதம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்ட ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் பங்கேற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 26ஆம் திகதி அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

இந்தக் கைதுக்கு எதிராக ஆகஸ்ட் 23ஆம் திகதி சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை தாக்கல் செய்தனர்.

ஆதாரம்: srilankabrief.org

19) **காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளர் சஹஜ மதுசங்க காலியில் கைது செய்யப்பட்டமை.**

ஆகஸ்ட் 20ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்கள அதிகாரிகளால் காலியில் வைத்துக் கைது செய்யப்பட்ட அவர், கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இந்த வழக்கைச் செப்டம்பர் 7-ம் திகதி திரும்பப் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

ஆதாரம்: twitter.com

20) **காலிமுகத்திடல் போராட்டத்தின் செயற்பாட்டாளராக இருந்த பியத் நிகேஷல கைது செய்யப்பட்டமை.**

பொலிஸாரினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், ஆகஸ்ட் 22 ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் ஆஜராகிய அவர் கைது செய்யப்பட்டு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதுடன், ஆகஸ்ட் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவளிக்கப்பட்டுள்ளது. போராட்டங்களில் பங்கேற்றது தொடர்பான மூன்று வழக்குகளில் அவர் குற்றவாளியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ஆதாரம்: twitter.com

21) **சோசலிச மாணவர் சங்கத் தலைவர் ரங்கன லக்மால் தேவப்பிரிய கைது செய்யப்பட்டமை.**

ஆகஸ்ட் 22ஆம் திகதி கம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திற்கு அருகில் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட அவர், 23ஆம் திகதி கொழும்பு கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: lankaweb.lk

22) **போராட்டத்துடன் தொடர்புடைய மற்றும் ஆற்றுகை கலைஞரான ஷாலிக ருக்ஷான் சேனாதீர கைது செய்யப்பட்டமை.**

ஆகஸ்ட் 24ஆம் திகதி கொழும்பு வொக்ஷோல் வீதியில் போராட்டக்காரர்கள் குழுவினால் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஒரு மாதத்திற்கு முன்னர் பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது அவர் நிகழ்த்திய கலை நிகழ்ச்சியின்போது பொலிஸ் சீருடையை ஒத்திருந்த ஆடையோன்றை உபயோகித்ததாகப் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர். இதுகுறித்து “தீர்த்த“ சர்வதேச கலைஞர்கள் கூட்டமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டு, இந்தக் கலைஞரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

ஆதாரம்: 1. facebook.com 2. facebook.com

23) **போராட்டத்தின் செயல்பாட்டாளர் சேனாதி குருகே கைது செய்யப்பட்டமை.**

“அரகலய தேசிய இயக்கத்தின்“ இணை அழைப்பாளராக இருந்த அவர், ஆகஸ்ட் 24ஆம் திகதி கொழும்பு மத்தியப் பிரிவு குற்றப் புலனாய்வுப் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு மறுநாள் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் செப்டம்பர் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். காலிமுகத்திடல் போராட்டப் பகுதியில் இரண்டு இராணுவப் புலனாய்வு அதிகாரிகளை வலுக்கட்டாயமாகத் தடுத்து வைத்த சம்பவத்தில் சந்தேக நபராக அவர் பெயரிடப்பட்டுள்ளார்.

ஆதாரம்: youtube.com

24) **ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டமைக்காகச் செயற்பாட்டாளர்கள் பலரை நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தியமை.**

ஜூலை 13 ஆம் திகதி ஜனாதிபதி அலுவலகத்திற்குள் பலவந்தமாகப் பிரவேசித்து ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய குற்றச்சாட்டின் பேரில் ஜோசப் ஸ்டாலின், அருட் தந்தை ஜீவந்த பீரிஸ், துமிந்த நாகமுவ, ரங்கன தேவப்பிரிய மற்றும் மங்கள மத்துமகே ஆகியோர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆகஸ்ட் 24ஆம் திகதி முன்னிலைப்படுத்தப்பட்டதனை தொடர்ந்து. தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுவிக்க நீதவான் உத்தரவிட்டார்.

ஆதாரம்: dailynews.lk

25) **காலிமுகத்திடல் போராட்டத்தின் ஆர்வலரான கன்னியாஸ்திரி மேரி சோனாலியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியமை.**

இரண்டு மாதங்களுக்கு முன்னர், ஜூன் மாதம் 7 ஆம் திகதி இடம்பெற்ற “தீயூட்டல்” சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக வென்னப்புவ பொலிஸாருக்கு அழைக்கப்பட்ட கன்னியாஸ்திரி மேரி சொனாலி, கடந்த 30 ஆம் திகதி மாரவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: twitter.com

26) **ஆர்ப்பாட்டத்தின்போது செயற்பாட்டாளர்கள் 27 பேர் கைது செய்யப்பட்டமை.**

அடக்குமுறைக்கு எதிராக, ஆகஸ்ட் 30 ஆம் திகதி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, புறக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இந்தச் செயற்பாட்டாளர்கள், மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டது.

ஆதாரம்: twitter.com

27) **கலைத்துறையில் செயற்பாட்டாளரும் தொழில்முறை வடிவமைப்பாளருமான சஞ்சய ஏபா செனவிரத்னவை நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்தியமை.**

கடந்த ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி குருந்துவத்தை பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு, அண்மையில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் தொடர்பான நடவடிக்கைகள்குறித்து விசாரிக்கப்பட்டதுடன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: twitter.com

28) **நீதிமன்றத்தில் ஆஜரான போராட்ட ஆர்வலர்கள் இருவருக்கு பிணை வழங்கப்பட்டமை.**

ஜனாதிபதி செயலகத்துக்குள் பிரவேசித்தமைக்காகச் சந்தேகநபர்களாகப் பெயரிடப்பட்டுள்ள செயற்பாட்டாளர்களான சங்க ஜயசேகர மற்றும் சமல் அகலங்க ஆகியோர் ஆகஸ்ட் 31 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகியதுடன் தலா ஐந்து இலட்ச ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக 16 ஆர்வலர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஆதாரம்: dinamina.lk

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**‘கட்டமைப்புரீதியான விதிமுறைகள்“ ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் “கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு“ என்ற குறிகாட்டியின் கீழ் இரு சம்பவங்கள் ஆகஸ்ட் மாதத்தில் அவதானிக்கப்பட்டது. சர்வதேச மனித உரிமைப் பாதுகாவலர்களும் வெளிநாட்டு இராஜதந்திரிகளும் சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் என்ற கூறுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிகழ்வுகள் தொடர்பாக மேற்கொண்ட பல தலையீடுகள் இந்தக் குறிக்காட்டியுடன் தொடர்புடையதாக இருந்த போதிலும், நடைமுறை சிக்கல் காரணமாக, அவை அனைத்தும் இங்குத் தனித்தனியாகக் குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

**அட்டவணை 04 – 2022 ஆகஸ்ட் கட்டமைப்புரீதியான விதிமுறைகள் – 02 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 02 |
| **மொத்தம்** | **02** |

1) **அமைதியான போராட்டங்களை ஒடுக்குவதற்கு அவசரகாலச் சட்டங்களைப் பயன்படுத்துவதை ஐ.நா மனித உரிமை நிபுணர்கள் கண்டித்துள்ளமை.**

அவசரகால நடவடிக்கைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்து அரசாங்கத்திற்கு பல சந்தர்ப்பங்களில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியபோதிலும், அது பலனளிக்கவில்லை என்பதாக ஆகஸ்ட் 8 ஆம் திகதி வெளியிடப்பட்ட குறித்த அறிவிப்பின் மூலம் வலியுறுத்துகின்றது. அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் கருத்து தெரிவிப்பதற்குமான உரிமையை மீறுவதற்கு அண்மைக்காலங்களில், அவசரகாலச் சட்டம் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்யப்படுவதனை கண்டிப்பதாகக் குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: ohchr.org

2) **போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதை கண்டித்து ஹியுமன் ரயிட்ஸ் வொச் அமைப்பு தமது எதிர்ப்பைத் தெரிவித்தமை.**

அமைதியான போராட்டக்காரர்களை இலக்கு வைத்துக் கொடூரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்துமாறும் அவர்களின் உரிமைகளை மதிக்குமாறும் இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தைக் குறித்த அமைப்பு வேண்டிக்கொள்கின்றது. ஆகஸ்ட் 18 ஆம் திகதி அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற மூன்று மாணவ ஆர்வலர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் எவ்வித வழக்கு விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டது உட்பட சமீபத்திய பல நடவடிக்கைகளுக்கு அமைப்பு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: hrw.org

## தொழில்சார் நிபுணத்துவம்

**‘தொழில்சார் நிபுணத்துவம்’ என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும்.சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கான சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய–தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளரின் பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழில்சார் நிபுணத்துவம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது.**

**அட்டவணை 05 – 2022 ஆகஸ்ட் தொழில்சார் நிபுணத்துவம் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளரின் பங்கு (பொறுப்பு) பற்றிய புரிதல் | 01 |
| **மொத்தம்** | **01** |

1) **"இடர் சூழ்நிலையில் அறிக்கையிடல், ஊடகவியலாளரின் பொறுப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் வரம்புகள்" என்ற தலைப்பில் சுதந்திர ஊடக இயக்கம் திறந்த உரையாடலொன்றை ஏற்பாடு செய்தமை.**

ஆகஸ்ட் 23ஆம் திகதி Zoom ஊடாக இடம்பெற்ற இந்த உரையாடலில் ஊடகவியலாளர் அமல் ஜயசிங்க பிரதான உரையை நிகழ்த்தியதுடன், ஊடகவியலாளர்களான தரிந்து உடுவரகெதர, சாந்த விஜேசூரிய, அஷாந்தி வர்ணசூரிய ஆகியோரும் தமது கருத்து மற்றும் அனுபவங்களைப் பரிமாறிக்கொண்டனர். ஊடகவியலாளர் ஷான் விஜேதுங்க கருத்தாடலை நெறிப்படுத்தினார்.

ஆதாரம்: facebook.com

---

**அட்டவணை 6 : ஊடக சுதந்திரம் : 2022 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி – ஜூலை | | 2022 ஆகஸ்ட் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 45 | | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 54 | 19 | 28 |
| ஊடக சுயாதீனத்துவம் | 06 | | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | 03 | | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 12 | 01 | 02 |
| **மொத்தம்** | **120** | **20** | **36** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன். அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும். இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


## Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25